சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 87 | 31-01-2013



24-01-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

## தலைப்பு : நீதித்துறையின் சுதந்திரமும் இலங்கையும்

முதலாளித்துவத்தால் முன்வைக்கப்படும் "சனநாயகம்" எனும் எண்ணக்கரு சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இம்மூன்று துறைகளும் சமமாகவும் சுதந்திரமாகவும் செயற்படக்கூடிய அமைப்புக்கள் என்ற அடிப்படையிலேயே மேற்குலகின் முதலாளிய எண்ணக்கரு உருவாக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் "சனநாயகம்" என்பது இருக்கவேண்டுமானால் நீதித்துறைச் சுதந்திரம் இருக்க வேண்டும் அல்லது நீதித்துறைச் சுதந்திரம் இருப்பது போன்று தோற்றமாவது காட்டவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதாவது, மக்கள் நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படுகிறதென்றும் தமக்கு நீதி கிடைக்கும் என்றும் நம்பும்படியாக மேற்குல சனநாயகம் செயற்பட்டு வருகிறது.

அரைகுறை முதலாளித்துவ நாடுகளைப் பொறுத்தவரை அவர்கள் இரண்டாம் உலகப்போருக்குப் பின் காலனியாதிக்கத்திலிருந்து விடுபட்டிருப்பதால் அவர்களது சனநாயகமானது காலனியாதிக்கவாதிகளால் திணிக்கப்பட்ட சனநாயகமாகவே இருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரை நீதி என்பது மேற்குலகால் விளங்கிக்கொள்ளப்பட்டபடி சனநாயகத்தின் அடிப்படையில் விளங்கிக்கொள்ளப்படவில்லை.

இலங்கையின் நீதித்துறை என்பது குறிப்பாக கொலனி ஆதிக்கத்தின் நீட்சியாகத்தான் இடம்பெற்று வந்திருக்கின்றது. அதனடிப்படையில் குறிப்பாக நீதித்துறையில் இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து வசதி படைத்தவர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் இடையிலான வேறுபாடு தெளிவாகவே இருந்து வந்துள்ளது. இலங்கையின் நீதித்துறையில் வர்க்க நலன் தெளிவாக இருக்கும்.

1970களின் கடைசிப்பகுதிகளிலும் எண்பதுகளின் இடைக்காலம் வரையிலும் நீதித்துறையானது அரசியல்மயப் படுத்தப்பட்டதாக இருக்கவில்லை.

> 19வது யாப்புத் திருத்தத்தின் மூலம் உயர் நீதிமன்ற நீதியரசரின் பதவிக்காலத்தை 3 ஆண்டுகளாக மட்டுப்படுத்துவது, நீதிபதிகளைச் சனாதிபதி தற்றுணிவின் அடிப்படையில் பதவி விலக்குவது போன்ற விடயங்கள் ஆராயப்படுகின்றன. நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி முறை நடைமுறையில் இருக்கின்றவரை சுதந்திரமான நீதித்துறை என்பது எதிர்பார்க்கமுடியாத ஒன்றாகவே இருக்க முடியும்

அதன்பின் நீதித்துறை நியமனங்களும் சுயாதீனத்தன்மையும் அரசியலாக்கப்பட்டதன் பின்னணியில் நீதித்துறையானது அரசியல் நோக்கங்களுக்காகவும் அரசியல் இலாபங்களுக்காகவும் இயங்குகின்ற கருவியாக இலங்கையில் மாறிவிட்டது.

அரசியல் இலாபங்களுக்காகத் தீர்ப்புகள் வழங்கப்பட்டு அரசியல் நோக்கங்களுக்காக இயங்குவதாக்கப்பட்டபின் இலங்கையின் நீதித்துறையானது தனக்கான சவக்குழியைத் தானே தோண்டத் தொடங்கி விட்டது.

1977 அரசியல் யாப்பினடிப்படையில் இலங்கையின் நீதித்துறைக்குக் குறிப்பிடத்தக்களவு சுதந்திரம் இருந்தது. நீதிப் புனராலோசனை அதிகாரம் (Judicial review) என்பது இலங்கையின் தற்போதைய அரசியல் யாப்பில் இருக்கவில்லை. அத்தோடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியை மையப்படுத்திய அரசியல் அமைப்பில் நீதித்துறையின் சுதந்திரம் என்பது தொடர்ச்சியாகக் கேள்விக்குரியதாகவே இருந்துவந்துள்ளது.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**அழகியல்**
ராஜரட்ணம் | 31-01-2013

R2P (Right to protect)
தெ. ஞா. மீநிலங்கோ | 07-02-2013



கல்பனா சாவ்லா

**இந்தியாவில் பிறந்து அமெரிக்க பிரஜையானவர் கல்பனா சாவ்லா(Kalpana Chawla, ஜூலை 1, 1961 - பெப்ரவரி 1, 2003).** கொலம்பியா விண்வெளி கலத்தில் ஏழு விண்வெளி வீரர்களுடன் பயணம் செய்த முதல் பெண்மணி எனும் பெருமைக்கு உரியவர். STS-107 என்ற கொலம்பியா விண்ணோடத்தில் பறந்து பூமிக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, விண்கலம் வெடித்துச் சிதறியது. அதில் கல்பனா சாவ்லா உயிர் இழந்தார். கல்பனா சாவ்லாவை கௌரவிக்கும் பொருட்டு நியூயார்க் நகரிலுள்ள ஒரு சாலைக்கு அவருடைய பெயர் வைக்கப் பட்டுள்ளது.

1984 இல் சோவியத் விண்கலத்தில் பயணித்த முதல் இந்திய ஆண் விண்வெளி வீரரான ராகேஷ் ஷர்மாவை அடுத்து விண்வெளி சென்ற முதல் இந்திய பெண் வீராங்கனை என்ற அழியா பெருமையை இவர் பெற்றார். கல்பனாவின் முதல் பயணத்திலேயே அவர் 360 மணி நேரம் விண்வெளியில் இருந்து, 10.4 மில்லியன் மயில்கள் கடந்து பூமியைச் சுற்றி சிதறி இருக்கும் 252 கோளப்பாதைகளை வலம் வந்துள்ளார்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## நீதித்துறையின் சுதந்தைரமும் இலங்கையும்

முன்பக்கத் தொடர்ச்சி..

ஆனாலும் நீதிபதிகளின் சுயாதீனமான பக்கசார்பற்ற நடவடிக்கைகள் காரணமாக நீதித்துறை மீது மக்கள் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர்.

ஆனால், நீதிபதிகளை நியமிப்பதற்கான வழிகளைப் பெற்றுக்கொடுத்த 17வது அரசியற் திருத்தம் இல்லாமற் செய்யப்பட்டு முற்றுமுழுதான அதிகாரங்களையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி தன்னிடத்தில் கொள்ளுகின்ற 18ம் யாப்புத்திருத்தம் நிறைவேற்றப்பட்டதோடு சுதந்திரமான நீதித்துறைக்குச் சாவுமணி அடிக்கப்படுவிட்டது.

அதன் விளைவுகளையே நாம் இப்போது காண்கிறோம்.

தற்போது இலங்கையில் இருக்கும் அரசியமைப்பு நெருக்கடியானது அடிப்படையில் நிர்வாகத்துறைக்கும் நீதித்துறைக்கும் இடையிலானதாகும்.

இதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது பாராளுமன்றத்தின் மீயுயர் தன்மை என்கிற கோட்பாட்டினை இலங்கையின் அரசியல் யாப்பு வலியுறுத்துகின்றமையாகும்.

வலுவேறாக்கற் கோட்பாட்டின்படி சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகிய மூன்றும் சுயாதீனமாகவும் ஒன்றை ஒன்று தங்கியிராமலும் இயங்கவேண்டும்.

இதுவே ஓர் ஆரோக்கியமான சனநாயகச் சூழலுக்கு வழிவகுக்கும்.

ஆனால் இலங்கை நிலவரத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி என்பது பாராளுமன்றத்தின் மீயுயர்த்தன்மை என்ற வாதத்தோடு முனைப்படைகின்றபோது நீதித்துறையைப் பாராளுமன்றம் கட்டுப்படுத்தக்கூடியவாறு அமைந்துவிடுகிறது.

இது நீதித்துறையின் சுயாதீனமான செயற்பாட்டுக்கு ஊறு விளைவிப்பதாகவும் தடையாகவும் அமைந்து விடுகிறது. இதுவே இலங்கையில் இம்மூன்று துறைகளுக்கும் இடையில் இடம்பெறும் மோதலுக்கு அடிப்படைக் காரணமாகும்.

இலங்கையின் நீதித்துறையும் நீதித்துறை நியமனங்களும் அரசியலாக்கப்பட்ட பின்னணியில் நீதிபதிகளை நியமித்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி அவரது விருப்பப்படி தீர்ப்புகள் அமையவேண்டும் என எதிர்பார்க்கிறார்.


அவ்வாறு அவர் எதிர்பார்ப்பதற்கு வழிகோலியது நீதித்துறை அரசியல்மயப்பட்டதன் விளைவே. இந்த அடிப்படையில் திவிநிகும சட்டமூலத்திற்கு எதிராக உர் நீதிமன்றம் அளித்த தீப்பானது நீதித்துறைக்கும் சட்டத்துறைக்குமான மோதலைத் தீவிரப்படுத்தியது.


இதன் விளைவால் உயர் நீதிமன்ற நீதியரசர்க்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டு பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டுப் பதவி விலக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால் பாராளுமன்றத்தால் இலங்கை அரசியல் அமைப்புக்கு உட்பட்ட முறையில் நீதியரசரை விசாரணைக்குட்படுத்தவோ குற்றவாளியாகக்காணவோ முடியாது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

எனவே பிரதம நீதியரசரை பதவி விலக்கியது சட்டபூர்வமானதல்ல என்பது ஒருபுறமிருக்க, உயர்நீதிமன்றின் தீர்ப்புகளை மறுக்காது இலங்கை அரசாங்கம் நடந்துகொண்டதானது இலங்கையின் நீதித்துறையின் நிலையையும் அதன் சுதந்திரத்தின் நிலையையும் இலங்கையில் நிலவும் சர்வாதிகாரப்போக்கையும் கோடிட்டுக்காட்டுகிறது.

மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் சில விடயங்கள் இப்போது ஆராயப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 19வது யாப்புத் திருத்தத்தின் மூலம் உயர் நீதிமன்ற நீதியரசரின் பதவிக்காலத்தை 3 ஆண்டுகளாக மட்டுப்படுத்துவது, நீதிபதிகளைச் சனாதிபதி தற்றுணிவின் அடிப்படையில் பதவி விலக்குவது போன்ற விடயங்கள் ஆராயப்படுகின்றன. நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி முறை நடைமுறையில் இருக்கின்றவரை சுதந்திரமான நீதித்துறை என்பது எதிர்பார்க்கமுடியாத ஒன்றாகவே இருக்க முடியும்





**அழகியல்**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)**

- அழகியல் பற்றிய அறிமுகம்
- அழகியல் குறித்து எழுப்பப்படும் வினாக்கள்
- அழகியல் என்ற சொல்லின் பயன்பாடு
- அழகியலுக்கான வரையறைகள்
- அழகியலை விளங்கிக்கொள்வதற்கான கொள்கைகள்
- அழகியல் தொடர்பான பிரச்சினைகள்
- அழகியல் மொழி
- அழகியல் மதிப்பீடு

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.